கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதலாம் வருட/முதலாம் அரையாண்டு கலைமாணித் தேர்வு – 2017/2018
(நவம்பர்/டிசெம்பர் 2019)

# PS 1112 அரசறிவியலின் அசைவியக்கம் (Dynamic of Political Science)

நேரம் : 02 மணித்தியாலங்கள்

**பகுதி-I இல் இருந்து ஏதேனும் இரு வினாக்களிற்கும் பகுதி-II இல் இருந்து இரு வினாக்களிற்கும் எல்லாமாக நான்கு வினாக்களிற்கும் விடை தருக.**

## பகுதி – I

01. (i) அரசறிவியலின் வியாபகத்தினை விளக்குக.

(12 புள்ளிகள்)

(ii) அரசறிவியலில் பயன்படுத்தப்படும் மரபு ரீதியான அணுகுமுறைகளின் சாதக, பாதக அம்சங்களை விளக்குக.

(13 புள்ளிகள்)

02. (i) அரசின் தோற்றம் தொடர்பில் மாக்சிச கொள்கையினை விளக்குக.

(12 புள்ளிகள்)

(ii) அரசின் தோற்றம் தொடர்பில் சமூக ஒப்பந்தக் கோட்பாட்டாளர்களின் தோமஸ் ஹெப்பர் (Thomas Hobbes) வாதங்களை விளக்குக.

(13 புள்ளிகள்)

03. பின்வரும் எவையேனும் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) சமத்துவத்தின் வகைகள்
(ii) அரசறிவியலும் ஏனைய சமூக விஞ்ஞானங்களும்
(iii) உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நவீன அரசுகள் மேற்கொள்ளும் வழிமுறைகள்

(2x12.5 புள்ளிகள்)

## பகுதி – II

04. "இறைமை தொடர்பில் போடினினால் (Bodin) முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் சமகாலத்தில் பொருத்தப்பாடுடையதாகக் காணப்படவில்லை" இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

(25 புள்ளிகள்)

05. சட்ட உருவாகத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைப் பகுப்பாய்வு செய்க.

(25 புள்ளிகள்)

06. "மக்களின் சுதந்திரங்கள் மற்றும் உரிமைகள் தடுக்கப்படும்போது புரட்சிகள் ஏற்படுகின்றன?" இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை எடுத்துக்காட்டுகள் மூலம் ஆராய்க.

(25 புள்ளிகள்)

*****